**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண். 83/2022</u>**

2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் நாள் திங்கட்கிழமை சாட்சியாகிய **<u>கயல்விழி PW.2</u>** இன் வாக்குமூலம், 2023 ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 27.01.2025

| | | | |
|---|---|---|---|
| Name | : கயல்விழி PW-2 | | |
| Father Name | : அய்யாறு | Court | : |
| Village | : கிராம நிர்வாக அலுவலர், நடுக்கரை, மேலப்பாதி. | Taluk | : |
| Calling | : | Religion | : |
| Age | : 32 | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

<u>முதல் விசாரணை:</u>

நான் இவ்வழக்கில் வாதி தரப்பு 2 வது சாட்சி ஆவேன். நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். 21.02.2011 தேதியிட்ட ஆவண எண் 307/2011 மற்றும் 29.07.2013 தேதியிட்ட ஆவண எண் 1513/2013 ஆகிய கிரய பத்திரங்களில் சொத்து விபரத்தில் கண்டுள்ள நடுக்கரை, மேலப்பாதி கிராமம், முத்துக்குமரன் நகர் மனை எண் 51 மற்றும் 52 ஆகியவை என்னால் கிராம வருவாய் FMB ன்படி அளந்து பார்த்ததில் மனை எண்கள், அமைவிடம், நான்கெல்லைகள் அனைத்தும் சரியாக உள்ளது என்றும்,. ஆனால் அவற்றின் புல எண்களின் விஸ்தீரணம் மட்டும் தவறாக பதிவுசெய்யப்பட்டுள்ளது என நான் சான்று வழங்கினேன். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் சான்று நான் வழங்கியதுதான், அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த சான்று சாசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

**<u>1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

நான் தாவா சொத்தினை நேரில் ஆய்வு செய்தேனா என்றால்

செய்தேன். மேற்படி தாவா சொத்தினை அளவீடு செய்து சான்று அளிப்பதற்கு எனக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.